Rogistered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2202 வைகாசி 10 ( 25 – 05 – 1991 ) சனிக்கிழமை ஓசை: 96

## உப்பு செறிவு அதிகரிப்பு; மீன் இறப்பும் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். கடலேரிப் பகுதியில் உப்புச் செறிவு உயர்வு மற்றும் வேறு சில காரணிகளாலும் மீன்கள் இறக்கும் விகிதம் திடீரென அதிகரித்துள்ளது. இப்பகுதியில் உயர் வெப்ப நிலை காரணமாக கடல் நீரின் உப்புச் செறிவு அதிகரித்துள்ளதுடன் கடல் நீரில் சில மீன் இனங்களின் உயிர் வாழ்வுக்கு ஊறு விளைவிக்கக் (4ஆம பக்கம் பார்க்க)

# இலங்கைத் தமிழ் அகதிகளை உடன் திருப்பி அனுப்புக

## செல்வி ஜெயலலிதா மத்திய அரசிடம் கோரிக்கை

(சென்னை)

தமிழகத்தில் தஞ்சம் புகுந்திருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகள் அனைவரையும் உடனடியாக இலங்கைக்கு திருப்பி அனுப்ப வேண்டுமென அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேறக் கழகத் தலைவி ஜெயலலிதா மத்திய அரசைக் கேட்டுள்ளார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையைத் தொடர்ந்தே அ. இ. அ. தி. மு. க தலைவி ஜெயலலிதா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதே கருத்தை நேற்று முன்தினம் வெளியிட்டிருக்கும் இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி இலங்கைத் தமிழர் செய்யும் வேண்டாத வேலைகளையெல்லாம் ஈழத்துக்குள் செய்து கொள்ளட்டும். இலங்கைத் தமிழர் எவரும் இங்கிருக்கக் கூடாதென குறிப்பிட்டுள்ளார்.

## சங்குப்பிட்டி - மடு பஸ்சேவை

(நமது நிருபர்)

இன்று முதல் மாலை எட்டு மணிக்கு சங்குப்பிட்டியிலிருந்து மடுவரை பஸ் வண்டி போக்குவரத்தில் ஈடுபட்டுள்ளது. இந்த பஸ் மடுத்திருப்பதியில் இருந்து பிற்பகல் நான்கு மணிக்குப் புறப்பட்டு சங்குப்பிட்டிக்குவந்து சேரும்.

## புலிகளைச் சாடுபவர்கள் காங்கிரஸ்காரர் மட்டுமே

(சென்னை)

ராஜீவ்காந்தியின் கொலைக்குக் காரணமான குண்டு வெடிப்புடன் புலிகள் சம்பந்தப்பட்டிருப்பார்கள் என்ற கருத்தை தமிழக அரசியல்வாதியான ப. நெடுமாறன் மறுத்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், ராஜீவைக் கொல்லவேண்டிய அவசியம் புலிகளுக்கு இல்லை என்றும், அவர்கள் தமிழக மற்றும் இந்திய அரசியலில் நாட்டம் இல்லாதவர்கள் என்றும் குறிப்பிட்டார். அத்துடன் புலிகளைச் சந்தேகிக்கும் அனைவரும் காங்கிரஸ்காரர்களே தவிர விசாரணை நடத்தும் அதிகாரிகள் அல்லர் எனவும் தெரிவித்துள்ளார்.

## மணலாற்றில் குண்டு வீச்சு; பாடசாலை, கோவில் சேதம்

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் சில நாட்கள் இடைவெளியின் பின்பு மீண்டும் மேற்கொள்ளப்பட்ட விமானத்தாக்குதலால் பொதுமகனொருவர் படுகாயமடைந்துள்ளார். வைத்தியசாலை, பாடசாலை வர்த்தக நிலையம், நான்கு வீடுகள் என்பன பலத்த சேதமடைந்துள்ளன.

நேற்றைய தினம் மாலை ஆறு மணியளவில் அளம்பில், (4ஆம் பக்கம் பார்க்க)

## வீடுபார்க்கச்சென்ற மூவர் மன்னாரில் கைது

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் வீடுபார்க்கச் சென்ற மூன்று அப்பாவித் தமிழ்மக்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை பதினொரு மணியளவில் நானாட்டானில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் மன்னார் மாவட்டத்திலுள்ள உமனேரி என்னுமிடத்திற்கு வீடு பார்க்கச் சென்ற பள்ளிமடுவைச் சேர்ந்த திரு. ஆரோக்கியம், திரு அந்தோனிப்பிள்ளை ஆகியோருட்பட மூன்று பொதுமக்களைக் கைதுசெய்து தமது முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

இவர்கள் பற்றிய விபரம் இதுவரை தெரியவில்லை.

## சிங்கோனாதாவரம் அழிப்பு; சிறிலங்கா கவலை

(ஹாலி-எல)

பியர் மற்றும் மலேரியா தடுப்பு மருந்து ஆகியன தயாரிக்கப்பயன்படுத்தப்படும் சிங்கோனா தாவரம் விறகுத் தேவைக்காக அழிக்கப்படுவது குறித்து சிறிலங்கா மத்திய சூழல் பாதுகாப்புசபை கவலை தெரிவித்துள்ளது.

குறிப்பாக இந்த சிங்கோனா தாவரம் பதுளை நமுனுகுல மலைப்பிரதேசம் ஆகிய இடங்களில் பரவலாக வளர்ந்துவருகிறது.

## யாழ். நகர் பாடசாலைகளில் தங்கியிருப்போரை இடம் மாற்ற நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பாடசாலைகளில் முகாம் அமைத்துத் தங்கவிடப்பட்டுள்ள தீவகப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களைத் தற்காலிகமாக வேறு இடங்களில் தங்கவைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் முதல்கட்ட நடவடிக்கையாக பொஸ்கோ மகா வித்தியாலய அகதிகள் நேற்று முன்தினம் கைதடி சி. எம். எஸ். பாடசாலைக்கு மாற்றப்பட்டனர்.

இதில் ஒன்பது குடும்பங்கள் மட்டுமே அங்கு செல்ல விரும் (4ஆம் பக்கம் பார்க்க)

## கொக்கிளாய் மீது ஷெல் தாக்குதல்

(மணலாறு)

மணலாறு மாவட்டத்திலுள்ள தென்னைமரவாடியில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்றுமுன்தினமிரவு எட்டுமணியளவில் கொக்கிளாய், முகத்துவாரம் பகுதிகளை நோக்கி ஆறு தடவைகள் ஆட்லறி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதேவேளை நேற்று அதிகாலை இரண்டுமணியளவில் முந்திரிகைக்குளத்தில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் கொக்கிளாய் 15 ஆம் கட்டைப்பகுதியை நோக்கி மீண்டும் பல தடவை (4ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் சூட்டிற்கு பெண் காயம்

(மன்னார்)

நேற்றுக் காலை ஒன்பது மணியளவில் நானாட்டானில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் பொதுமக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மன்னார்சூரியகட்டைக்காட்டைச் சேர்ந்த அருட்சோதி (வயது 27) என்ற இளம்பெண் படுகாயமடைந்துள்ளார்.

## இல. தமிழர் முகாம்கள் தீவிர கண்காணிப்பில்

(சென்னை)

தமிழ் நாட்டிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியிருக்கும் முகாம்கள் தீவிர கண்காணிப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும், ஊடுருவலைத் தடுக்க கடலோரக் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாகவும் மாநில முதல் செயலாளர் டி. வி. அந்தோனி கூறியுள்ளார்;

## விசாரணைக் கமிசன்; முரசொலிமாறன்கோரிக்கை

(சென்னை)

தேசிய முன்னணி, இடதுசாரிக் கட்சிகளின் அலுவலகங்கள் மற்றும் தலைவர்களின் வீடுகள் தாக்கப்பட்டிருப்பது குறித்து விசாரணைக் கமிஷன் நியமிக்கப்பட வேண்டும் என முரசொலி மாறன் கோரியுள்ளார். தி. மு. க. தலைவர்களில் ஒருவரும், நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினருமான திரு. முரசொலி மாறன் ஆளுநர் பீஷ்ம நாராயண சிங்கைச் சந்தித்து மேற்கண்ட கோரிக்கையை விடுத் (4 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அளிக்குமாறு ஆளுநரிடம் கோரிக்கை

புதுச் சேரியில் தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்கள் மாநில துணைநிலை ஆளுநர் ஹரஸ்வரூப்சிங்கைச் சந்தித்துப் பேசியுள்ளனர். இச்சந்திப்பின் போது ராஜீவ் காந்தியின் கொலையைத் தொடர்ந்து இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை சுட்டிக்காட்டி, அரசியல் கட்சிகளுக்கும் பொதுமக்களுக்கும் தக்க பாதுகாப்பளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரும் மகஜர் ஒன்றைக் கையளித்தனர்.

## சென்னைக்கு விமானத்தை ராஜீவ் ஓட்டிச் சென்றார்

(சென்னை)

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. ராஜீவ் காந்தி சென்னைக்குச் சென்ற போது விமானத்தை தாமே (4 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் பூதவுடல் நேற்று மாலை சக்திஸ்தல்லில் தகனம்

(டில்லி)

ஜமுனா நதிக்கரையில் உலகத் தலைவர்கள், முக்கியஸ்தர்கள் அடங்கலாகப் பெருந்திரளான பொது மக்கள் முன்னிலையில் ராஜீவ் காந்தியின் பூதவுடல் சக்திஸ்தலில் தகனம் செய்யப்பட்டது.

ராஜீவ் காந்தியின் பதினேழு வயது மகன் ராகுல் காந்தி நேற்று மாலை ஐந்துமணி இருபத்தைந்து நிமிடத்திற்கு சிதைக்குத் தீ மூட்டினார்.

இதே இடத்தில் தான் 1984 இல் ராஜீவ்காந்தி தனது அன்னை இந்திரா காந்தியின் சிதைக்குத் தீ மூட்டினார்.

பீரங்கிகள் இறுதி வணக்கம் தெரிவித்து முழங்கின. ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன், (4 ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

**விற்பனைக்கு**

குளியலறை, மலசலகூடம், கழுவுநீர்த்தொட்டி கண்ணாடிகள் வற்றின் அழுக்கு அகற்றிப் பளிச்சிடும் வெண்மைபெற மில்க்வைற் திரவசவர்க்காரம். அரைப்போத்தல் ரூ. 45/- மட்டுமே. எங்கும் விற்பனையாகிறது. மில்க்வைற் (B-2555)



**யாழ். பல்கலைக் கழகம், இலங்கை.**

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் 1989/90 ஆம் கல்வி ஆண்டின் இரண்டாவது அரை ஆண்டுக்கான விரிவுரைகள் 1991 ம் ஆண்டு ஆனி மாதம் 3 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்பதனை இத்தால் விஞ்ஞானபீட மாணவர்களுக்கு அறியத் தருகின்றேன். முன்பு திட்டமிடப்பட்டவாறு விரிவுரைகள் 1991 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 29 ஆம் திகதி ஆரம்பிக்கப்படமாட்டாது.

பதிவாளர்,

23-5-91

(B/2575)



## உள்ளூர் உணவு பதார்த்த விற்பனை

உள்ளூரில் உற்பத்தியாகும் சிறு தானியங்களைக் கொண்டு தயாரிக்கப்படும் உணவுப் பதார்த்த உற்பத்தியாளர்கள் அவற்றை விற்பனை செய்வதற்கு, ''உதயம் பல்பொருள் அங்காடியுடன்'' தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இலக்கம் 117
மே/பா ஈழநாதம்.

(B/2574)



## தமிழ் சுருக்கெழுத்தாளர்/தட்டெழுத்தாளர்

பிரபல நிறுவனம் ஒன்றிற்கு மேற்படி பதவிக்கு ஆண்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

அனுபவமுள்ள ஆண்கள் 31.05.91 க்கு முன் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

விளம்பர இலக்கம்-118
மே/பா. ஈழநாதம்

(B/2573)


## அறிவித்தல்

வடபிராந்தியத்துக்குட்பட்ட சுருட்டு உற்பத்தியாளர்கள் இதுவரை அனுமதிப்பத்திரம் பெறாதவர்கள் 1.06.91 ற்கு முன்பாக சங்கப்பணிமனையில் அனுமதிப்பத்திரத்தைப் பெற்று தொழிலாளர்களுக்கு வேலை வழங்கும்படி கேட்கப்படுகின்றீர்கள் இதில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வன்னி மாவட்ட சுருட்டு உற்பத்தியாளர்களும் அடங்குவர்.

சங்கம் நடாத்த இருக்கும் பெண்களுக்கான இலவச தட்டச்சு, தையல் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

5.06.91 பி.ப 4 மணிக்கு முன்பாக சங்க காரியாலயத்தில் கையளிக்கவும். விண்ணப்பப் படிவங்களை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர்சங்கம்

71 கே. கே எஸ் வீதி
கொக்குவில் மத்தி

செல்லையா உருத்திரா
தலைவர்

(R/1407)

## நினைவு கூருகின்றோம்...

**1991 - 05 - 25**



**அப்பன்**

(கனகரட்ணம் பிரபாகரன் - கோண்டாவில்)

1987ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரமரணமடைந்த
**சுரேஸ்** (சுந்தர் - முள்ளிப்பொத்தானை)

1988ஆம் ஆண்டு ஏழாலையில் இந்தியப்படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த
**அப்பன்** கோண்டாவில் பிரதேசப் பொறுப்பாளர் (கனகரட்ணம் பிரபாகரன்-கோண்டாவில்)

இதே ஆண்டு பருத்தித்துறையில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த
**ஒஸ்ரின்** (கணேசன் இளங்கோவன் - பருத்தித்துறை)

1989ஆம் ஆண்டு பாலையடி வெட்டையில் இந்திய இராணுவமும், தேசத்துரோகிகளும் மேற்கொண்ட முற்றுகையின் போது ஏற்பட்ட மோதலின் பின் சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த
**குகநாதன்**

இதே ஆண்டு இந்தியப் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால் உயிரிழந்த
**தேவசகாயம்** (திருமலை)


ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B/2561)

# 90ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



## வீரவேங்கை சிந்து

**(இரகுநாதன் சரவணபவன்)**

தாயின் மடியில்:
11-07-1974

தாயக விடிவில்:
25-02-1991

கண்ணுறங்கு கண்ணுறங்கு கண்மணியே கண்ணுறங்கு
மண்ணை மீட்டெடுக்க மாவீரம் காட்டிநின்ற மாமணியே நீயுறங்கு
அண்ணன்மார் போற்றுகின்றார் அவனியருமேத்துகின்றார்
ஆருயிரே கண்ணுறங்கு
கண்ணே கருவிழியே கற்பகமே பொன்வண்டே தாலேலோ!

முல்லை நிலச் சோலையிலே முழுநிலாப் போதினிலே
வல்லவனாம் செங்கதிரும் வீரமொழி கூற விரும்பி நீ வழிநடந்தாய்
நல்லவனே! நற்கண்டே! நானிலத்தின் ஒளிவிளக்கே நீயுறங்கு
சொல்லரிய புகழ்படைத்த சோதியே! என்உயிரே உறங்குறங்கு!

ஈழத்தாய் திருமடியில் இன்துயிலார் கண்மணியேயாம்
வாழவழி கண்டாய் வன்னித்தாய் தலையணையில் நீயுறங்கு
நாளையுன் கனவு நனவாகும் நற்கண்டே! தேனே! நீயுறங்கு
தோழர்களும் புலிக்கொடியை ஈழமெங்கும் பறக்கவைப்பார்
புண்ணியனே உறங்குறங்கு

உறங்குறங்கு கண்மணியே ஆருயிரே கண்ணுறங்கு
அறம்பல பேணிநின்ற என்னுயிரே நீயுறங்கு
மறக்கொடியில் பிறக்கவில்லை மாவீரனாகி விட்டாய்
தறு கண்ணாய் என்னுயிரே தேனே தாலேலோ!

மேஜர் செங்கதிருடன் சென்று தாய்நாட்டிற்காக
தன் இன்னுயிர் ஈந்த என் அருமை மகன் (மைந்தன்)
**வீரவேங்கை சிந்துவின் (இரகுநாதன் சரவணபவன்)**
மறைவைக் கேள்வியுற்று வருகைதந்து
ஆறுதல் வார்த்தை கூறிய அனைவருக்கும்
**எனது நன்றிகள்!**

—சிந்துவின் அன்புத் தாயார்

(B-2568)

## ❋ சிந்தனைக்கு ❋

நச்சுண்டார் நாவிழந்தார்

— தமிழ்ப் பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 25.05.1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05

# கை ஏந்தும் நிலையும் கையாலாகாத் தனமும்

சிறிலங்காவில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது தேர்தல் முறைகேடு நடந்ததாக சிறிலங்காவிற்கான பிரித்தானியத் தூதுவர் ஜிளட்சன் பொலிஸில் புகார் செய்ததை அடுத்து எழுந்த சர்ச்சையை சுமூகமாக தீர்த்து வைக்கும் மூகமாக சிறிலங்கா வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பேனார்ட் திலகரட்னா பிரிட்டன் சென்றுள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தலின்போது திக்வெல்லையில் ஐக்கிய தேசியக் கட்சியினர் தேர்தல் முறை கேட்டில் ஈடுபட்டனர் என்பது சிறிலங்காவின் உள்நாட்டு விவகாரம். இதில் தலையிடுவதற்கு பிரிட்டிஷ் தூதுவருக்கு அதிகாரம் இல்லையென ஐ தே. கவின் செயலாளர் நாயகம் சிறிசேன குரே சர்வதேச கண்காணிப்பு குழுவிற்கும், சிறிலங்கா வெளிவிவகார அமைச்சிற்கும் புகார் செய்திருந்தார்.

ஆனால், இது தொடர்பாக சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சு எந்தவித தீவிர நடவடிக்கையையும் உடன் மேற்கொள்ளவில்லை. இராஜதந்திர நடைமுறைகளின் படி பிரிட்டிஷ் தூதுவர் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சிற்கு அழைக்கப்பட்டு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டிருத்தல் வேண்டும். அல்லது பிரிட்டிஷ் தூதுவராலயத்திற்கு ஆட்சேபனை அனுப்பப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறான சம்பவம் எதுவும் இடம்பெறவில்லை. தனது இராஜதந்திர ரீதியான எதிர்ப்பைக்கூட சிறிலங்கா-அரசாங்கத்தால் தமது சொந்த மண்ணில் வைத்தே செயற்படுத்த முடியாமல் போய்விட்டது.

அதைவிடுத்து இராஜதந்திரிகளுக்கான ஜெனிவா பிரகடனத்தை பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் டேவிட் ஜிளட்சன் அப்பட்டமாகவே மீறினார் என்பதற்கு கொழும்பில் உள்ள உயர்ஸ்தானிகராலயத்திடம் உத்தியோக பூர்வமாக புகார் தெரிவிப்பதில்லை என்று சிறிலங்கா வெளிவிவகார அமைச்சு முடிவு செய்திருந்தது. இதற்கு சிறிலங்கா பிரிட்டிஷ் நட்புறவை பாதிப்படையச் செய்ய தாம் விரும்பவில்லை எனவும் சிறிலங்கா விளக்கம் அளித்துள்ளது.

சிறிலங்காவின் இந் நடவடிக்கை அதன் கையாலாகாத் தனத்தின் வெளிப்பாடே ஆகும். ஒரு நாட்டின் இராஜதந்திரி வரம்பு மீறி நடந்தார் என்பதை வெளியிடக் கூடிய நிலையில்கூட சிறிலங்கா இல்லை என்பதே உண்மையாகும்.

சிறிலங்காவிற்கு கடந்த காலத்தில் பொருளாதார உதவிகளை பிரதானமாக வழங்கி வந்த நாடுகளில் பிரிட்டனும் ஒன்றாகும். துரித மகாவலித் திட்டத்தில் உள்ளடக்கிய விக்ரோறியா அணைக்கட்டிற்கு பிரிட்டனே நிதியுதவி அளித்திருந்தது. ஆனால் அண்மைக் காலத்தில் சிறிலங்காவில் மகாவலி நிதி இராணுவ தளபாடக் கொள்வனவிற்குப் பயன்படுத்தப்படுவதாக எழுந்த சர்ச்சையைத் தொடர்ந்தும், மனித உரிமைகள் பெரியளவில் மீறப்படுவது குறித்தும் பிரிட்டன் கவலை தெரிவித்திருந்தது. இதன் தொடர்பாக சிறிலங்காவிற்கு வழங்குவதாக இருந்த முப்பது இலட்சம் டாலர் உதவியையும் நிறுத்தி வைத்துள்ளது.

மேலும், சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் ஐரோப்பிய பொருளாதார சமூகத்தினுள்ளும் பிரிட்டனின் செல்வாக்கு குறிப்பிடக்கூடிய முக்கியம் வாய்ந்ததாகும். இந்த ஐரோப்பிய பொருளாதார சமூகமும் அண்மைக் காலமாக சிறிலங்காவில் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்து கண்டனம் தெரிவித்து வந்துள்ளன. மனித உரிமைகள் தொடர்ந்து மீறப்படுமானால் சிறிலங்காவிற்கான உதவியை மீள் பரிசீலனை செய்யப்போவதாகவும் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் அந்நிய நாட்டு உதவியிலேயே பெருமளவில் தங்கியுள்ள சிறிலங்கா அரசாங்கம் எவ்வாறு பிரிட்டன் தூதுவரை வெளிநாட்டு அமைச்சு அலுவலகத்திற்கு அழைத்துக் கண்டிக்க முடியும்.

பிரிட்டன் தூதுவர் ஜிளட்சன் சிறிலங்கா உள்விவகாரத்தில் தலையிட்டிருக்கலாம்; ஆனால் அதனை பிரிட்டன் கண்டிக்கப் போவதில்லை. மேற்குலகத்தவர் பார்வையில் ஜனநாயகமும், இறைமையும் தன்னாதிக்கமும் தனியாக அவர்களுக்கு மட்டுமே உரிமையானதாகும். தாங்கள் மட்டும் அணுவாயுதங்களை வைத்துக்கொண்டு மற்றவர்கள் குறிப்பாக மூன்றாம் உலகத்தவர் வைத்திருப்பதற்கு கட்டுப்பாடுகளும், அதற்கான நியாயமும் கற்பிப்பவர்கள் அவர்கள்.

இந்நிலையில், அவர்களிடம் கையேந்தி நிற்பவர்கள் அவர்களுக்கு ஆத்திரம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் அக்கறை கொண்டுள்ளது நியாயமே ஆனால், பிரதிவாதியிடம் சென்று வாதி விளக்கம் அளிக்கும் நிலைக்கு சிறிலங்கா அரசாங்கம் தாழ்ந்து போவது இராஜதந்திர வழிமுறைக்கே இழுக்காகும்.

# புலிகளுக்கு தொடர்பு; புதிய தகவல் உண்டு

: சுப்பிரமணியம் சுவாமி

(புதுடில்லி)

ராஜீவ் காந்தி கொலையுண்ட குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் விடுதலைப் புலிகளைத் தொடர்புபடுத்தும் புதிய தகவல் கிடைத்திருப்பதாக இந்திய மத்திய அமைச்சர் டாக்டர் சுப்பிரமணியம் சுவாமி கூறியுள்ளார். புதுடில்லியில் செய்தியாளரிடம் பேசிய அவர் இச்சம்பவத்தில் புலிகளின் கை இருக்கிறது என்பதற்கான திட்டவட்டமான தகவல் ஏதும் இல்லாதபோதும் பூர்வாங்க அறிக்கைகள் புலிகளின் தொடர்பு இருப்பதை உறுதி செய்வதாக கூறினார். இதேவேளை விடுதலைப் புலிகளுக்கும், குண்டு வெடிப்புக்கும் தொடர்பு உண்டா என்ற கேள்விக்கு பதிலளித்த மத்திய உள்துறை இணை அமைச்சர் சுபோத்காந் சகாய் இந்நிலையில் எதையும் முடிவுகட்ட முடியாது என்றார்.

# கொக்குத்தொடுவாய் மீது ஷெல், விமானத்தாக்கு

(மணலாறு)

சிறிலங்கா இராணுவத்தினரால் மணலாறு மாவட்டத்திலுள்ள கொக்குத்தொடுவாய்ப் பகுதியை நோக்கி நேற்றையதினம் ஆட்லறி ஷெல் தாக்குதலும், அவ்ரோ விமானத் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டன.

நேற்றுமுன்தினம் காலை 4-45 மணியளவில் முந்திரியக்குளத்தில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் கொக்குத்தொடுவாய்ப் பகுதியை நோக்கி ஆட்லறி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதேவேளை நேற்றுமாலை 6-30 மணியளவில் இப்பகுதியில் அவ்ரோ விமானமொன்று ஆறு பீப்பாக் குண்டுகளை வீசியது. இத்தாக்குதலில் ஏற்பட்ட சேதவிபரங்கள் கிடைக்கவில்லை.

# அதிபர் போட்டிப் பரீட்சை ஆயத்தக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினால் நடத்தப்படும் அதிபர் தரம் I, II, III போட்டிப் பரீட்சைக்கான ஆயத்தக் கருத்தரங்கு வரும் ஞாயிறு, திங்கள், செவ்வாய் கிழமைகளில் (26, 27, 28 ஆம் திகதி) வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கை வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் அவர்கள் ஞாயிற்றுக்கிழமை (26-5-91) காலை 8-30 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்து வைப்பார் என தமிழர் ஆசிரிய சங்க செயலாளர் அறிவித்துள்ளார்.

# குடும்பத் தகராறு கத்திவெட்டில் முடிந்தது

(யாழ்ப்பாணம்)

குடும்பத்தகராறு உக்கிரமடைந்து கத்தி வெட்டு சம்பவம் வரை சென்றதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஒரே வீட்டில் இரு குடும்பங்கள் குடியிருப்பது தொடர்பான தகராற்றில் கனகரத்தினம் (வயது 54) என்பவர் முகத்தில் பலத்த வெட்டுக்காயத்திற்குள்ளாகியுள்ளார். (க)

# ரோஹண விஜேவீராவின் முக்கிய பங்காளி கைது

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மருத்துவமனையில் வைத்து கடந்த மார்ச் மாதம் 28ஆம் திகதி பொலிசாரால் கைது செய்யப்பட்டு 'பொடி அப்புகாமி' என்று அடையாளம் காணப்பட்டவரே ஜே. வி. பி. தலைவர் ரோஹண விஜேவீராவின் முக்கிய பங்காளியான அந்தரிஸ் ஏக்கநாயக்க என இப்போது தெரிய வந்திருப்பதாக அம்பாந்தோட்டைப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# கிராமிய ஆஸ்பத்திரிகளில் மருந்து தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள கிராமிய வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளது. யாழ் குடாநாட்டில் இடம் பெயர்ந்த மக்கள் தொகை அதிகரிப்பே இந்த மருந்துத்தட்டுப்பாட்டுக்கு காரணம் எனவும் யாழ் பிரதான மருந்து களஞ்சியத்தில் தெரிவிக்கப்பட்டது.

வட பகுதியில் உள்ள மருத்துவமனைகளுக்கு மூன்று மாதத்திற்கு ஒரு முறை மருந்துப் பொருள்கள் வழங்கப் பட்டு வருவதே வழக்கம். இதன் படி ஒவ்வொரு மருத்துவ மனைக்கும் தேவையான மருந்துப் பொருள்கள் அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் நோயாளிகள் தொகை அதிகரித்ததால் இவை உடனடியாக தீர்ந்து போய் விட்டது. இப்பொழுது இந்த அகதிகள் தொகை அதிகரித்த மருத்துவ மனைகள் மருந்து பொருள்களை பெற்று சென்றுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (லோ)

# கிறிஸ்தவ குருவானவரின் சைவசித்தாந்த ஆய்வு

(குருநகர்)

கிறிஸ்தவக் குருவானவர் சைவ சித்தாந்த ஆய்வு வட்டம் நடாத்தும் ஆய்வரங்கில் தொடர்ந்து ஆறு வாரங்கள் ஆறு பொருள்களில் ஆய்வுரைகள் நிகழ்த்தவுள்ளார்.

யாழ். திருமறைக் கலா மன்ற இயக்குநர் வண. பேராசிரியர் நீ. சவிரிமுத்து அடிகளே இவ்வாய்வுரைகளை நிகழ்த்துவார்.

ஜூன் மாதம் 5 ஆம் திகதி முதல் ஜூலை 10 ஆம் திகதி வரையான ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் மாலை 5.00 மணிக்கு ஆய்வுரைகள் இடம் பெறும்.

மெய்கண்டதேவர், அருள்நந்தி சிவாசாரியார், திருவியலூர் உய்யவந்ததேவர், திருக்கடவூர் உய்யவந்ததேவர், மனவாசகம் கடந்த தேவர், உமாபதி சிவாசாரியார் ஆகிய பொருள்களில் ஆய்வுரைகள் நிகழ்த்தப்படவுள்ளன.

இந்த ''சைவ சித்தாந்த ஆய்வு வட்டம்'' யாழ். ஆயர் இல்லத்தை முகவரியாகக் கொண்டிருப்பது மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். (21)

# சைக்கிள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித்திணைக்களத்தில் நிறுத்திவைக்கப் பட்டிருந்த பெண்மணி ஒருவரின் துவிச்சக்கர வண்டி கடந்த புதனன்று திருடப்பட்டுள்ளது.

# இளைஞர் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

வாழ்வில் மனமுடைந்த இளைஞர் ஒருவர் நச்சுவிதைகளை உண்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். யாழ். நகரைச் சேர்ந்த பாஸ்கரன் (வயது 17) என்ற இளைஞரே இவ்வாறு மரணமடைந்துள்ளார். (க)

# மதகு கடக்க 10 ரூபா

(யாழ்ப்பாணம்)

உங்களால் முடியுமா? முடியாவிட்டால் எங்களிடம் தாருங்கள் செய்து தருகிறோம் ஆனால் பத்துரூபா தர வேண்டும் என தீவகப்பகுதி மக்களிடம் பணம் உழைக்கும் ஒரு பகுதியினர் பண்ணை வீதியில் காத்து நிற்கின்றனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து பண்ணைவீதி ஊடாக தீவகத்திற்கு பயணம் செய்யும் மக்கள் உடைந்த பாலங்களின் குறுக்கே வைக்கப்பட்ட மின் கம்பங்களின் மேலாக தமது சைக்கிள்களை காவி செல்ல வேண்டும் ஒருசிலர் பயந்து நடுங்கினால் அங்கு நிற்கும் இளைஞர்கள் தாமாக முன்வந்து இவ்வாறு கேட்கின்றனர். (லோ)

# நண்டுண்ட நால்வர் மயக்கம்

(செ. த. மை.)

இரவு நண்டுக் கறியும், மறுநாள் காலை பயறும் சாப்பிட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் மயக்கமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது. யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்த ஆர். விஜயலட்சுமி (வயது 44), ஆர். அருட்பிரியா (வயது 14), ஆர். சதீஸ்வரன் (வயது 11), ஆர். ஆரூரன் (வயது 09) ஆகிய நால்வரும் மயக்கமடைந்தவர்களாவர்.

# பீரங்கித்தாக்குதல்

(செ. த. மை.)

கடற்படையினரின், பீரங்கிப் படகு கடந்த புதனன்று இரு தடவைகள் வல்வெட்டித்துறை, ஊரிக்காட்டுப் பகுதிகளை நோக்கி பீரங்கி வேட்டுக்களை தீர்த்தது. இத்தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் எதிர்த்தாக்குதல் மேற்கொண்டதைத் தொடர்ந்து கடற்படைப்படகு உயரக் கடலை நோக்கிச் சென்றுவிட்டது.

கடந்த புதனன்று மாலை பருத்தித்துறையிலிருந்து காங்கேசன்துறை நோக்கிச்சென்று கொண்டிருந்த 'குமண', 'லங்காசிறி' ஆகிய கப்பல்களுக்குப்பாதுகாப்பளிக்கவந்த கடற்படையினரின் விசைப் படகே தாக்குதலில் ஈடுபட்டது. மாலை 5-40 மணியளவிலும் இரவு 8-10 மணியளவிலும் குடிமனைகளை நோக்கி தொடர்ச்சியாக பீரங்கி வேட்டுகள் தீர்க்கப்பட்ட போதிலும் பொதுமக்கள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை.

# செஞ்சிலுவைச் சங்கம் உணவு விநியோக நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வழங்குவதற்கு ஒப்புக்கொண்ட உணவு விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

இறுதியாக யாழ். செயலகத்தில் இடம்பெற்ற உணவு விநியோகம் தொடர்பான கலந்துரையாடலில் செஞ்சிலுவைச் சங்கம் மேற்படி மக்களுக்கு உலர் உணவு விநியோகத்தின் ஒருகட்டத்தை வழங்குவதற்கு ஒப்புக்கொண்டது. ஆனால் இதுவரை இவ்வுணவு விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை. இவ்விடயம் தொடர்பாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் செயலாளர் கருத்துத் தெரிவிக்கையில் இவ்வுணவு விநியோகத்தை மேற்கொள்ள தாம் எந்த நேரமும் தயாராக இருப்பதாகவும், ஆனால் போதுமான அளவில் உணவுப்பொருள் கையிருப்பில் இல்லை என்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் எமக்கு உணவுப் பொருள்களைத்தரும் என்று நம்பியிருந்தோம். அவர்கள் கடைசி நேரத்தில் காலைவாரிவிட்டனர். இந்நிலையில்நாம் உணவு விநியோகத்தை மேற்கொள்ள முடியாத நிலையில் இருக்கின்றோம். இவ்வுணவு விநியோகத்தை மேற்கொள்வதானால் சுமார் 200முதல் 300 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் தேவை என்றும் இந்த அளவில் எம்மிடம் உணவுப் பொருள்கள் இல்லை என்றும் தெரிவித்தார். (க)

# ஊழியரை நிரந்தரமாக்க வர்த்தகர் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஒரு வருடகாலத்துக்கு மேல் சேவையிலிருக்கும் பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட நிரந்தர ஊழியருக்கு மாதாந்த அடிப்படைச் சம்பளம் ரூபா 2000 ஆக இருத்தல் வேண்டும். ஒரு வருடத்திற்குமேல் சேவையிலிருக்கும் 18 வயதிற்கும் 21 வயதிற்கும் இடைப்பட்ட நிரந்தர பெண்ஊழியர்களுக்கு மாதாந்த அடிப்படைச் சம்பளம் ரூபா 1000 ஆக இருக்க வேண்டும் 21 வயதிற்கு மேற்பட்ட நிரந்தர பெண் ஊழியருக்கு மாதாந்த அடிப்படைச் சம்பளம் ரூபா 1500 ஆக இருக்கவேண்டும் என்று யாழ். வர்த்தகர் சங்கப் பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இத் திட்டம் ஜூன் மாதம் முதலாம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்படவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

பின்வரும் விடயங்களும் மேற்படி கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது:

தற்போதைய சூழ்நிலை காரணமாக சேமலாப நிதி செலுத்தப்படாதவிடத்து சம்பளக் கொடுப்பனவுடன் சேர்த்துக் கொடுக்கப்படவேண்டும். சேமலாபநிதி தொடர்ந்து கட்டப்படவேண்டும் என்று விரும்பும் ஊழியர்களுக்கு அப்பணம் கட்டப்படவேண்டும்.

ஞாயிற்றுக்கிழமை தவிர்த்து ஏனைய நாட்களில் வர்த்தக நிலையங்கள் வியாபாரம் செய்யலாம். சனிக்கிழமைகளில் பி. ப. 2 மணிமுதல் 5 மணி வரை மூன்று மணித்தியால வேலைக்கு மேலதிக கொடுப்பனவு வழங்கப்படவேண்டும்.

அனுமதியின்றி வேலைக்கு வராது நின்றால் வேலைக்கு வராத நாட்களுக்குரிய சம்பளம் வழங்கப்படாது.

வகுப்புத் தொழிலாளிக்கு ஒரு மூடை எடைபோட்டு இறக்க ரூபா 2.50-ம் எடைபோட்டு ஏற்ற ரூபா 3-ம் வழங்கப்படவேண்டும்.

ஞாயிற்றுக்கிழமைகளில் பொருள்களுடன் லொறி வருமாயின் அவை உடன் இறக்கப்படவேண்டும்.

# கடத்தல் பங்கீட்டில் கோஷ்டி மோதல்

(கொழும்பு)

கடத்திவந்த தங்கப் பொதியினை விற்றுப் பெற்ற பணத்தினை பங்கிடும்போது அக் கோஷ்டிக்கிடையே மோதல் ஏற்பட்டது. அவ்வேளை அங்குவந்த இரகசியப் பொலிசார் இவர்களைக் கைதுசெய்தனர்.

இவர்களால் கடத்திவரப்பட்ட தங்கப் பொதியை இவர்கள் செட்டித்தெருவில் உள்ள நகைக்கடை ஒன்றில் விற்றபின் பணத்தை கட்டுநாயகா சர்வதேச விமான நிலையத்தின் அருகில் வைத்து பங்கிட்டபோது இவர்களுக்குள் தகராறு ஏற்பட்டது. இதன்போது அங்குவந்த பொலிசார் இக்கோஷ்டியில் 12 பேரைக் கைது செய்தனர்.

# 30ஆம் திகதிக்குள் பெறவும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் மதிய உணவிற்காக வழங்கப்பட்ட மாசிமாதத்திற்கான மாணவ உணவு முத்திரைகளுக்கான பொருள்களை சகல மாணவர்களையும் இம் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். செயலக அதிகாரி கேட்டுள்ளார்.

இதுவரையில் பாடசாலையில் மாசிமாத மாணவ உணவு முத்திரையை பெறாத மாணவர்கள் உடனடியாக இதனைத் தத்தமது பாடசாலை அதிபர்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச)

## கலந்துரையாடல்

கால்நடை மருத்துவப் பயிற்சியை முடித்துக்கொண்டோர்க்கான கலந்துரையாடல் எதிர்வரும் 28 05. 91 அன்று செவ்வாய்க்கிழமை காலை 10·00 மணிக்கு தமிழீழ ஆய்வு நிறுவன மையப்பணியகத்தில் இடம்பெறவுள்ளது. எனவே கால்நடை பயிற்சிபெற்ற அனைவரும் இக்கலந்துரையாடலில் தவறாது கலந்துகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர்.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் இடம் பெறும் தமிழீழ ஆய்வுக்கருத்தரங்குத் தொடரில் இன்றைய விடயங்களாக யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் கலாநிதி சி. க. சிற்றம்பலம் அவர்களின் தமிழீழ வரலாறு, எஸ் சத்தியசீலன் எழுதிய ஐரோப்பியர் கால வரலாறு, பேராசிரியர் என். பாலகிருஷ்ணன், எழுதிய சமூகப்பின்னணி என்பன இடம்பெறும். காலை 9 30 மணிக்கு இடம் பெறும் இக் கருத்தரங்கில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளும்படி மறுமலர்ச்சிக் கழகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

## பண்டிகை முற்பணம்

காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை ஊழியர்களுக்கு பண்டிகை, விசேட முற்பண கொடுப்பனவுகள் இன்று சனிக்கிழமை நாவலர் வீதியிலுள்ள தற்காலிக காரியாலயத்தில் காலை 8 மணிமுதல் பிற்பகல் 1 மணி வரை வழங்கப்படும் என கணக்காளர் தெரிவித்துள்ளார்.

விசாரணைக்

தார்.

மத்திய உள்துறை அமைச்சகத்திடம் அனுமதி பெறாமல் இத்தகைய கமிஷன் அமைக்கப்பட முடியாது என ஆளுநர் கூறியதாக பின்னர் செய்தியாளரிடம் முரசொலி மாறன் கூறியுள்ளார். காவல் துறை போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கத் தவறியதாக ஆளுநரிடம் முரசொலி மாறன் புகார் தெரிவித்துள்ளார்.

உப்பு

கக்கூடிய நச்சுப்பதார்த்தங்களின் செறிவு உயர்ந்ததாலும் மீன் இனங்கள் சில இப்பகுதியில் இறந்து மிதப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது என்று மீன்பிடிப் பயிற்சிப்பாடசாலையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி மீன் இனங்களின் இறப்பைத் தவிர்ப்பதற்கு புதிய ஆய்வுகள் நடாத்தப்படவேண்டியுள்ளது என்றும் இதற்கு யாழ் மாவட்டத்தில் போதிய வசதிகள் இல்லை என்றும் கவலை தெரிவித்தார்.

மீன்களின் இறப்புவிகிதம் தொடர்ந்தும் அதிகரித்தால் கடல் சூழல் மாசடைந்து ஏனைய மீன் இனங்கள், கடல்வாழ் தாவரங்கள் போன்றவற்றின் ஆயுட் காலத்திற்கும் ஆபத்து நேர்ந்து விடும் என்றும் அந்த அதிகாரி அச்சம் தெரிவித்தார்.

மணலாற்றில்

நாயாறு, கொக்கிளாய் ஆகிய பகுதிகளை நோக்கி அவ்ரோ விமானமொன்று ஆகோரக் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டது இத்தாக்குதல் நடாத்தப்பட்டபோது பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களில் பதுங்கிக் கொண்டதால் உயிர்ச் சேதங்கள் தவிர்க்கப்பட்டன. பொதுக் கட்டடங்களும் பெறுமதிமிக்க சாமான்கள் அடங்கிய வீடுகளுமே இத்தாக்குதலில் பலத்த சேதமடைந்துள்ளது.

தங்கியிருப்போரை

பியதாகவும் ஏனையோர் தமது உறவினர் வீடுகளில் தங்க விரும்பியதாகவும் இன்றுடன் இப்பாடசாலை முகாம் மூடப்படும் எனவும் இதனுடன் சம்பந்தப்பட்ட அதிகாரி தெரிவித்தார். இவர்கள் வீடுகளில் இருந்தாலும்சரி முகாமிலிருந்தாலும்சரி நிவாரணம் ஒரேமாதிரியாகவே வழங்கப்படும் என அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (ச)

கொக்கிளாய்

கள் ஆட்லறி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இத் தாக்குதல்களால் ஏற்பட்ட சேத விபரங்கள் இதுவரை கிடைக்கவில்லை.

சென்னைக்கு

ஓட்டிச் சென்றுள்ளார். அவர் விமானத்தை ஓட்டியபடியே பல்கேரியத் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டி அளித்துள்ளார். அப்பேட்டியையும், வீடியோப் படங்களையும் இச் செய்தி நிறுவனம் தற்போது வெளியிட்டுள்ளது.

# பெண்ணே காரணமென உறுதியாகியுள்ளதாம்

ராஜீவ் காந்தியின் கொலைக்கு ஒரு பெண்ணே காரணம் என்பது இப்போது ஏறத்தாழ நிரூபணமாகியிருப்பதாக செய்திகள் கூறுகின்றன.

இது பற்றி கருத்து வெளியிட்டிருக்கும் தமிழக அரசின் தடய அறிவியல்துறை இயக்குனர் டாக்டர் பி. சந்திரசேகரன் கூறியிருப்பதாவது: இராணுவத்தினர் பயன்படுத்தும் சக்தி வாய்ந்த நவீன வெடி குண்டை இப்பெண் தனது இடுப்பில் கட்டியிருந்த முரட்டுத் துணியிலான பெல்டிற்குள் மறைத்து வைத்திருக்கக் கூடும் இந்த வெடி குண்டு பிளாஸ்டிக் வெடி மருந்தினால் ஆனது என்பதால் இலகுவாக மறைத்திருக்கக் கூடும் எனத் தெரிவித்தார்.

மேலும் இதை இயக்குவதற்கு அதிநவீன கருவியையும் அதற்கான சிறிய பற்றறியையும் பயன்படுத்தியிருக்கக் கூடும் என்றும் கூறியுள்ளார் இந்தப் பெண் ஒருகையில் மாலையையும் மறுகையில் வெடிகுண்டை இயக்குவதற்கான சுவிட்சையும் வைத்திருந்திருக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை குண்டுவெடிப்பிற்கு சில கணங்களுக்கு முன்னர் ராஜீவ் காந்திக்கு மலர் மாலை கொடுத்த பெண்ணின் படமொன்றை இந்திய செய்தித் தாளான ஹிந்து வெளியிட்டுள்ளது. இந்தப் படத்திலுள்ள பெண் இந்தச் சம்பவத்திற்கு பொறுப்பாளியாக இருக்கலாமென மத்திய புலனாய்வுப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த விஜயஹரன் கூறியுள்ளார், குண்டு வெடிப்புக்கு சில கணங்களுக்கு முன் இப்படம் எடுக்கப்பட்டிருக்க வேண்டும், குண்டு வெடிப்பினால் சேதமுற்ற பெண்ணின் சடலத்தை பொலிசார் இயன்றளவுக்கு வடிவமைத்துள்ளனர். இதனால் இவரின் முகம் இனங் காணப்படத்தக்க நிலையை எட்டியுள்ளது.

ராஜீவ

உப-ஜனாதிபதி, உலகத் தலைவர்கள் மற்றும் பிரமுகர்கள் சக்திஸ்தலில் குழுமிய பல்லாயிரக்கணக்கான மக்கள் கூட்டத்துடன் சேர்ந்து மறைந்த தலைவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

பூதவுடல் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட பீரங்கி வண்டியில் எடுத்துச் செல்லப்பட்டது. அவரின் உடல் தேசியக் கொடியினால் மூடப்பட்டிருந்தது.

திருமதி சோனியா காந்தியும் பிள்ளைகளும் பூதவுடல் வைக்கப்பட்ட பீரங்கி வண்டியின் பின் நடந்துசென்றனர் இறுதி யாத்திரை சக்திஸ்தலை வந்தடைய மூன்று மணித்தியாலங்கள் சென்றன.

வழிநெடுக தாழப்பறந்த உலங்கு வானூர்தி ராஜீவின் உடலைத்தாங்கிச்சென்ற பீரங்கி வண்டிமீது மலர் மாரி சொரிந்தன.

உடலைப் பீரங்கி வண்டியில் இருந்து இறக்கிச் சிறப்பாகக் கட்டப்பட்ட மேடையில் மேல் இருந்த சிதையில் வைத்தார்கள்.

திருமதி சோனியா காந்தி, பிள்ளைகளான ராகுல், பிரியங்கா மந்திர உச்சாடனங்களுக்கிடையே தகனத்துக்கான இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டார்கள்.

உலகத் தலைவர்கள், உறவினர்கள் உட்பட ஆயிரக் கணக்கானமக்கள் தீன்மூர்த்தி பவனிலிருந்து சக்திஸ்தல்வரையிலான பத்துக்கிலோ மீற்றர் இறுதியாத்திரையில் கலந்து கொண்டனர். கடற்படை மற்றும் விமானப்படை வாத்தியக் கோஷ்டிகள் சோக கீதம் இசைத்தபடி இறுதி யாத்திரையின் முன்னே சென்றன.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மரணச்சடங்குகளில் கலந்துகொள்ள வருகை தந்த உலகப் பிரமுகர்கள் முன்னதாக ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனைச் சந்தித்தனர். இவர்கள் ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி, சோவியத் மற்றும் அமெரிக்கத் துணை ஜனாதிபதிகள், பங்களாதேஷ், மொறீசியஸ் பிரதமர்கள், பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ஆகியோராவர் இந்தத் தலைவர்கள் ராஜீவின் அகால மரணம் குறித்த தமது கவலையை ஜனாதிபதியிடம் தெரிவித்துக்கொண்டனர்

## தமிழ்நாட்டில் 8 பேர் மரணம்

தமிழ்நாட்டில் கடந்த 48 மணிநேரத்தில்மட்டும்எட்டுப் பேர் கொல்லப்பட்டதாக, மாநில முதல் செயலாளர் டி. வி. அந்தோனி கூறியுள்ளார். இரண்டுபேர் தீக்குளித்தனர். வேறு இருவர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டனர். 22 மாநில அரசு பஸ்கள் முற்றிலும் எரிக்கப்பட்டன நூற்றுக்கும் அதிகமான பஸ்கள் சேதப்படுத்தப்பட்டன. பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் 2500பேர் வரையில் பொலிஸாரால் கைதாகினர்.

# செஞ்சிலுவைச் சங்கத்தின் பதவி வெற்றிடம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை அமைய வினைஞர்களுக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இப்பதவிக்கு க. பொ. த. (சா. த) இல் (தமிழ், ஆங்கிலம், கணிதத்தில்) திறமைச் சித்தியும், தமிழ், ஆங்கிலம், தட்டச்சு சுருக்கெழுத்தில் சான்றிதழ் பெற்றவராகவும், கணக்கியல் துறையில அனுபவம் உள்ளவராகவும் இரண்டு வருடத்திற்கு குறையாத அனுபவமும் இருத்தல் வேண்டும். 20-45 வயதுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என மேற்படி சங்க கௌரவ செயலாளர் அறிவித்துள்ளார்,

விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் 29 ஆம் திகதி எனவும் நேர்முகப்பரீட்சை இம்மாதம் 31ஆம் திகதி நடைபெறும் என்றும், நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியானவர்களின் பெயர்ப்பட்டியல் 731, கண்டிவீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசமுடைய கந்தோர் விளம்பரப் பலகையில் வெளியிடப்படும் என்றும் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

(விளம்பர இலக்கம் - 2576

# கரவெட்டி இ. செ. சங்க அங்கத்தவர் கூட்டம்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு அங்கத்தினர் கூட்டம் 26·5·91 ஞாயிற்றுக் கிழமை பி. ப. 4.30 மணிக்கு கரவெட்டி சின்னத்தம்பி மகா வித்தியாலயத்தில் (மாலுசந்தி) நடைபெறும். முன்னர் அறிவித்திருந்தது போல் மேற்படி கூட்டம் கரவெட்டி தர்மலிங்கம் வித்தியாலயத்தில் நடைபெறாது என்று இலங்கை செஞ்சிலுவைச் சங்க கௌரவ செயலாளர் ச. சிவானந்தராசா தெரிவிக்கிறார்.

அங்கத்தினர் அனைவரும் கூட்டத்தில் பங்குபற்றுமாறு அழைக்கப்படுகின்றனர். (B / 2577)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்தில் உள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.